## நெல் சந்தைப்படுத்தல் சபை – 2013

-----------------------------------------------------------

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபையின் 30 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தாமதமாகியதன் காரணமாக சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 பெப்ரவரி 12 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் செம்மையாக்கல் அவசியமாகக் காணப்பட்டதா என்பதை நான் தீர்மானிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

------------------------------

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற முடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 7 உடன் இணங்காமை கீழே காணப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டின் போதிலான சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது கொள்வனவுத் தொகை ரூபா 2,771,794 ஆகும். எனினும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 148,983,194 ஆகக் காட்டப்பட்டமையால் காசுப் பிரவாகம் ரூபா 146,211,400 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய மீளாய்வாண்டினது நடைபெறும் வேலைக்குக் காசாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 77,866,128 ஆகும். எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது செயற்பாட்டு நடவடிக்கைகளது தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் ரூபா 68,124,139 காசுப் பிரவாக வருகை ஆகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது வேலை முடிவுற்றிராத யோத கண்டிய, வெள்ளவாய, மீதோட்டமுல்லை ஆகிய களஞ்சிய நிர்மாண வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 36,227,544 நடைபெறும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டுமாயினும், அப்பெறுமதியானது கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீதோடமுல்ல களஞ்சிய புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு 2012 ஆம் ஆண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 6,852,585 வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம் 2012 ஆம் ஆண்டின்போது மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது காணியும் கட்டிடங்களும் அதேயளவு தொகையாலும் தேய்மானமானது ரூபா 171,314 அதிகரித்தும் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுறவு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 90,000,000 ஆகும். எனினும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 454,000,000 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 364,000,000 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையானது கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்றிருந்த கடனைத் தீர்த்து வைப்பது தொடர்பாக கூட்டுறவு மொத்த விற்பனவுக் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின்போது கூட்டுறவு நிதியத்திற்கு வழங்கியிருந்த ரூபா 400,000,000 கொடுப்பனவு செய்ய வேண்டிய கூட்டுறவு நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெற வேண்டிய கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) நெல் கொள்வனவிற்காக கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற கடனுக்கு மீளாய்வாண்டின்போது செலுத்தவேண்டிய ரூபா 58,749,164 வட்டியானது கணக்கிலிடப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டினது நெல் கையிருப்புக் கொள்வனவின் பெறுமதி ரூபா 7,724,805,122 ஆகும். எனினும், அது ரூபா 7,755,264,523 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் இறுதிக் கையிருப்பு ரூபா 30,459,401 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) உணவுக் கூட்டுத்தாபனக் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான அரிசிக் கையிருப்பு விற்பனை செய்யப்படும்போதும் அரிசித் தயாரிப்பதற்கு அத்திணைக்களம் நெல்லை வழங்கும்போதும் சபைக்கு ரூபா 478,533,035 நட்டம் ஏற்பட்டிருந்தது. உணவுத் திணைக்களத்திடமிருந்து பெறப்படவேண்டிய அந்த நட்டம் ரூபா 37,987,400 குறைவாக அதாவது ரூபா 440,545,635 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2012, 2013 ஆம் ஆண்டுகளில் வங்கியில் நேரடியாக வைப்பிலிடப்பட்ட ரூபா 35,395,226 இனங்காணப்படாது நானாவித கடன்கொடுத்தோராகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 411,967,722 | நிலையான சொத்துப்பதிவேடு, உரித்துறுதி |
| இடைப்போக்கில் உள்ள கையிருப்பு | 54,385,222 | கையிருப்புப் பதிவேடு, கையிருப்புச் சரி, பிழை பார்த்தல் அறிக்கை |
| சோயா போஞ்சிக் கையிருப்பு | 3,302,853 | |
| அரிசிக் கையிருப்பு | 84,972 | |

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கொள்வனவுகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் பேரேட்டுக் கணக்கு மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 156,381 வித்தியாசம் நிலவியது.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 பெரும் போகத்தின்போது கொள்வனவு செய்யப்பட்ட 312,968 கிலோ கிறாம் பச்சை மற்றும் நாட்டு நெல் மூலமான ரூபா 10,591,828 பெறுமதியான அரிசிக் கையிருப்பு 2011 ஆம் ஆண்டின்போது உணவுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு முடிவிலும் அத்தொகை அறவிடப்படாதிருந்தது.

(ஆ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வரையறுக்கப்பட்ட லங்கா சதொசவிற்கு விற்பனை செய்யப்பட்ட அரிசிக்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டியிருந்த தொகை ரூபா 79,928,013 ஆகும். இது 2016 செப்டம்பர் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏற்றுமதி செய்வதற்கும் நன்கொடை வழங்குவதற்குமென அரிசியைத் தயாரிப்பதற்கு 2012 ஆம் ஆண்டின்போது 81 ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட 41,118.38 மெட்றிக் தொன் நெல்லுக்குரிய அரிசி போதியளவு கிடைக்காததுடன், சகல கழிவுகளின் பின்னர் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 ஆலை உரிமையாளர்களிடமிருந்து மேற்கொண்டும் ரூபா 219,848,491 அறவிடப்படவேண்டியிருந்தது. 2016 செப்டம்பர் 30 ஆந் திகதியளவிலும் இதனை அறவிடுவதற்கான சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டின்போது வீரக்கெட்டிய நெல் களஞ்சியத்தின் நுழைவுப் பாதை மற்றும் வளாகம் என்பவற்றைத் தாரிட்டுத் தயாரிப்பதற்கென தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 2,421,271 முற்பணம், 2010 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிருப்பு, போக்குவரத்திற்கென கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்கும் வழங்கப்பட்ட முற்பணமாகிய முறையே ரூபா 900,000 மற்றும் ரூபா 1,000,000 என்பன தீர்த்து வைக்கப்படாது முற்பணமாக மீளாய்வாண்டு முடிவளவிலும் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தன.

(உ) மீளாய்வாண்டின்போது கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் என்பன இணைந்து ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக சபைக்கூடாக வழங்கிய 9,588,045 கிலோ கிறாம் நெல்லிற்கு மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 348,537,877 மற்றும் 2014 முடிவில் உள்ளவாறு ரூபா 189,229,114 என அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) நெல் ஆலை உரிமையாளர்களால் 2013 நவெம்பர், டிசெம்பர் மாதங்களில் நெல்கொள்வனவிற்காக கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சினது வங்கிக் கணக்கில் செலவு வைத்த தொகை ரூபா 1,873,786,500 ஆகும். 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இதில் ரூபா 272,688,409 அறவிடப்படவேண்டியிருந்தது.

(எ) 2013 சிறுபோகத்தின்போது நெல் கொள்வனவிற்காக அம்பாறை மாவட்டச் செயலாளரிடமிருந்தும் லங்கா சதொச நிறுவகத்திடமிருந்தும் பெற்றுக்கொண்ட மொத்தக் கடனாகிய ரூபா 210,000,000 மற்றும் 2012/2013 பெரும்போகம் மற்றும் 2013 சிறுபோகம் என்பவற்றின்போது நெல் கொள்வனவிற்காக திருகோணமலை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் மீதியாகிய ரூபா 30,000,000 என்பன 2016 திசெம்பர் 31 வரை தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஏ) அரிசி ஏற்றுமதி மற்றும் நன்கொடை என்பவற்றிற்கு அரிசியைத் தயாரிப்பதற்கு 89 ஆலை உரிமையாளர்களுக்கு 36,644.36 மெட்ரிக் தொன் நெல் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆலை உரிமையாளர்களுக்கிடையே சிலர் குறித்த அளவு அரிசியைத் தயாரித்து ஒப்படைத்திருக்கவில்லை. சிலர் வழங்கவேண்டிய அளவிற்கு அதிகமாக அரிசியைத் தயாரித்துச் சபைக்கு வழங்கியிருந்தனர். பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய பெறுமதியைச் சீராக்கல் செய்ததன் பின்னர் மீளாய்வாண்டு முடிவில் 80 ஆலை உரிமையாளர்களுக்கு ரூபா 67,077,734 கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது. அது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,160,892 ஆகியிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையினது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நட்டம் ரூபா 1,036,227,966 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நட்டம் ரூபா 1,996,230,035 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நட்டம் ரூபா 960,002,069 குறைந்து காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் ரூபா 4,260,988,325 அதிகரித்தமையும் விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் ரூபா 8,809,862 குறைவடைந்தமையும் மேற்படி நட்டக் குறைவிற்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளது நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டினது நிதிப்பெறுபேறுகள் 857 சதவீத நலிவுற்றிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் 48 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,960,018,396 ஆகவிருந்த சபையின் எதிர்மறைப் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 994,488,974 வரை அதாவது, 49 சதவீதம் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுறவு மொத்த விற்பனவுக் கூட்டுத்தாபனத்திற்கு நெல்லை வழங்குகையில் கூட்டுத்தாபனமும் சபையும் இணக்கத்திற்குள்ளாகியிருந்த விலைக்கல்லாது சபை தீர்மானித்த விற்பனைப் பெறுமதி கணக்கிலிடப்பட்டமை மற்றும் கூட்டுத்தாபனம் சபை தீர்மானத்திருந்த விலைக்கும் குறைவான விலையை 2011 தொடக்கம் 2013 வரை செலுத்தியமையால் சேர்ந்த நட்டம் ரூபா 715,281,909 ஆகும். இது மீளாய்வாண்டினது இலாபத்துக்கெதிரே பதிவழிக்கப்பட்டமையால் ஆண்டிற்கான நட்டம் அதேயளவு தொகையால் அதிகரித்திருந்தது.

(ஆ) 2011, 2012 ஆம் ஆண்டுகளில் உணவுத் திணைக்களத்திற்குச் சபை வழங்கிய ரூபா 1,375,411,181 பெறுமதியான அரிசி மற்றும் நெல் கையிருப்பைக் குறைந்த விலைக்கு விற்றமையால் ரூபா 897,746,146 மாத்திரமே சபையால் பெறமுடிந்ததுடன், இவ்வரிசி விற்பனையால் ஏற்பட்ட ரூபா 477,665,035 நட்டத்தைக் கணக்கிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக, உணவு ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டியனவாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

-----------------------------------------

2010 ஆம் ஆண்டின்போதும் மீளாய்வாண்டின்போதும் சபை கொள்வனவு செய்த நெல் கையிருப்பிற்கு வங்கியால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை முறையே ரூபா 49,743,530 மற்றும் ரூபா 73,829,883 சம்பந்தமாக வங்கிக் கூற்றுக்களது தகவல்கள் வலயங்களிலிருந்து அனுப்பிவைக்கப்படும் தகவல்களுடன் முறையாக இனங்காணப்படாது அப்பெறுமதியானது நடைமுறைச் சொத்தின் கீழ் இனங்காணப்படாத நெல் கொள்வனவாக கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 4.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

-----------------------------------------

கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக நடவடிக்கைகள் அமைச்சு மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் என்பன இணைந்து 2013 ஆம் ஆண்டில் மேற்காண்ட அரிசி ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு சபை ஒரு கிலோ கிறாம் ரூபா 32 வீதம் 9,588,045 கிலோ கிராமை வழங்கியிருந்தது. இந்நெல் ஒரு கிலோ கிறாம் ரூபா 32 கொள்வனவு விலையைக் கொண்டதாகும். ஏனைய சகல செலவினங்களுக்கும் சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் விலை ரூபா 38.47 ஆகியது. இதற்கமைய, இந் நெல்லை வழங்குகையில் 1 கிலோ கிறாமிற்கு ரூபா 6.47 நட்டம் ஏற்படுவதால் ஒட்டுமொத்த நட்டம் ரூபா 62,034,651 ஆகியிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன்ட 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2016 ஆகஸ்ட் 05 அன்றே 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது வெளியாகிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறை** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) வாகனக் கட்டுப்பாடு | ஓட்ட அட்டவணைகளும் சம்பவப் பதிவேடுகளும் நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. |
| (ஆ) ஒப்பந்த நிர்வாகம் | பொருட்கொள்வனவு வழிகாட்டலிலிருந்து விலகியவாறு நடவடிக்கை மேற்கொண்டமை. |
| (இ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) களஞ்சியங்களில் முறையான நியமங்களுக்கேற்ப நெல்லைக் களஞ்சியப்படுத்தாமை. |
| | (ii) களஞ்சியத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமை. |
| | (iii) களஞ்சியக் கட்டுப்பாடு தொடர்பாக அறிவுரைகள் வழங்காமை. |
| (ஈ) கையிருப்புக் கட்டுப்பாடு | (i) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படாமை. |
| | (ii) கையிருப்புப் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை. |